**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண் 389/2025**

சின்னத்துரை பிரபு (வயது 35/2026)
த/பெ. சுந்தர்ராஜ்,
67/73, ஆர்.சி வடக்குதெரு,
சாத்தான்குளம். ...... மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர்/ஆட்சேபனையாளர்

/எதிர்/

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
சாத்தான்குளம் காவல்நிலையம்,
குற்ற எண்.27/2024. ...... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு 13.05.2025 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 01.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.தியோனிஷ் சசிமார்ஷன் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலித்து, 03.03.2026 ஆம் தேதி இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண்.27/2024 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்ட நபர்களாக குறிப்பிடப்பட்ட ஜெனிபர், ஆனஸ்ட், நல்லரசி மற்றும் அடையாளம் தெரியாத 5 நபர்களை வழக்கில் இருந்து நீக்கி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கை மீண்டும் சட்டப்படியாக புலன்விசாரணை செய்து சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர் தாக்கல் செய்த புகார்மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரரான சின்னத்துரை பிரபு சாத்தான்குளத்தில் குடியிருந்து வந்தார். 11.02.2024 அன்று அவருடைய வீட்டில் முன்னோர்க்கு சாமி கும்பிட்டதால் சென்னையில் இருந்து அவருடைய சித்தப்பா மகன் வேல்குமார், மது அஜய்குமார் ஆகிய இருவரும் வந்தார்கள். அவர்களை பஸ் ஏற்றி விடுவதற்கு பஸ் நிலையம் சென்றபோது அவர்களுடன் அவருடைய தம்பி வெற்றிவேல், சித்தப்பா மகன் பாலகிருஷ்ணன் மற்றும் கதிர்வேல் சென்றார்கள். அப்போது ராஜ்குமார், ராஜேஷ், ரஞ்சித், அழகுராஜா, அகஸ்டின், ராஜா, மாரியம்மாள், ஜெனிபர் மற்றும் அடையாளம் தெரியாத 5 நபர்கள் சேர்ந்து கம்பி,



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.27 17:54:16 +0530

அருவாள், கம்பு ஆகியவற்றை கொண்டு புகார்தாரரைப் பார்த்து ஏலே தேவடியா மவனே நீ என்ன பெரிய சுன்னியா என்று சொல்லி புகார்தாரரை கம்பியை கொண்டு அடித்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அருவாளை கொண்டு வெட்டியதில் அந்த வெட்டு புகார்தாரரின் முதுகில் விழுந்தது. சம்பவத்தை பார்த்து தடுக்க வந்த வெற்றிவேலை இத்தோடு செத்து தொல தேவடியா பயலே என கம்பியை கொண்டு வெட்டியதில் மூக்கில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. புகார்தாரரின் தம்பி வேல்குமாரை ரஞ்சித் கம்பியை கொண்டு அடித்ததில் தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. ஆனஸ்ட் என்பவர் வேல்குமாரை அருவாளை வைத்து வெட்டியதை புகார்தாரர் தடுத்தபோது புகார்தாரரின் தம்பி வெற்றிவேலுக்கும் வேல்குமாருக்கும் முதுகில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

பாலாவை ராஜ்குமார் ஏலே தேவடியா பயலே இவ்வளவு நாள் ஊரவிட்டு ஓடிட்டு இப்ப என்னல உனக்கு என கம்பியை கொண்டு அடித்ததில் பாலாவிற்கு பற்கள் உடைந்து வாயில் இரத்தகாயமும் அருவாளால் வெட்டியதில் முதுகில் வெட்டுக்காயமும் ஏற்பட்டது. தடுக்க வந்த முருகனுக்கு வலது கையில் வெட்டுக்காயமும், வலது முதுகில் வெட்டுக்காயமும் ஏற்பட்டது. அதனை தடுக்க வந்த புகார்தாரரின் சித்தியை எதுக்கு தேவடியா நீ இங்க வந்தா என ராஜா, அகஸ்டின் இருவரும் அடித்ததில் சித்திக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டது. ராஜா மற்றும் அகஸ்டின் இருவரும் கை மற்றும் காலால் அடித்தார்கள். சம்பவத்தை புகார்தாரரின் தங்கை மதுபாலா செல்போனில் வீடியோ எடுத்தபோது மாரியம்மாள், ஜெனிபர், நல்லரசி ஆகிய மூவரும் தேவடியா வீடியோ எடுத்தா நீ பெரிய ஆளு புண்டையா போன புடுங்கி உடைச்சி எறிந்து விடுவோம் என திட்டினார்கள்.

கடந்த 10.02.2024 ஆம் தேதியன்றும் புகார்தாரரை கொலை செய்து விடுவதாக பைக்கில் கத்தி, கம்பு அருவாளுடன் எதிரிகள் தெருவை சுற்றி வந்தார்கள். ராஜேஷ், ராஜ்குமார், அழகு ராஜா ஆகிய அனைவரும் உன் தம்பியை வெட்டிட்டோம், நீ வக்கீல்ன பெரிய புண்டமாரி போலீஸ் ஸ்டேசன்ல அன்னைக்கு பேசுன எங்க உன் அண்ணன், தம்பி உன்னால ஒரு புண்டையும் புடுங்க முடியாது, நாங்க உங்கள குடும்பத்தோட வெட்டனும்னு வெளியூருல இருந்து ஆள கூட்டிட்டு வந்து வெட்டினேன், உன் அண்ணன் தம்பிக்கு உயிர் முக்கியம்னா இருக்குற கொஞ்ச நஞ்ச வருடம் ஆஸ்பத்திரிக்கு போய் காப்பாத்த சொல்லு, நாங்க பெரிய ரவுடினு இதுல இருந்து தெரிந்திருக்கும். நீயும் போலீஸ் ஸ்டேஷன் போய் புகார் கொடுக்க போன நாங்க கூட்டிட்டு வந்துருக்குற ஆளுங்க உன்னையும் போட்டுருவாங்க தேவடியா என ஆபாசமாக பேசி தங்கையை அடித்தார்கள். பின்பு அன்றைய தினம் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் புகார்மனு கொடுத்தார்.



DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.27 17:54:23 +0530

மேற்படி புகார்மனுவின் அடிப்படையில் அந்தோணி, ராஜ்குமார், ராஜேஷ், ரஞ்சித், அழகுராஜா, அகஸ்டின், ராஜா, மாரியம்மாள், ஜெனிபர், ஆனஸ்ட், நல்லரசி மற்றும் அடையாளம் தெரியாத 5 நபர்கள் மீது கடந்த 11.02.2024 ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னிட்டு ராஜ் (எ) அந்தோணி, ராஜ்குமார், ராஜேஷ், ரஞ்சித், அழகுராஜா, அகஸ்டின், ராஜா, மாரியம்மாள் ஆகியோர்களுக்கு எதிராக மட்டும் இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(ii) இன் கீழான குற்றத்திற்கு குற்ற இறுதியறிக்கை கடந்த 27.05.2025 ஆம் தேதி சாத்தான்குளம் காவல் உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னிட்டு குற்ற இறுதியறிக்கையை பரிசீலித்த போது, முதல் தகவல் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்ட நபர்களாக குறிப்பிடப்பட்ட ஜெனிபர், ஆனஸ்ட், நல்லரசி மற்றும் அடையாளம் தெரியாத 5 நபர்களை வழக்கில் இருந்து நீக்கி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது புலப்படுகிறது. அதனால் இந்நீதிமன்றத்தில் இருந்து மனுதாரருக்கு மேற்படி எதிரிகள் நீக்கியது குறித்து ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்குமாறு மனுதாரருக்கு அறிவிப்பு கடந்த 27.05.2025 ஆம் தேதியன்று அனுப்பப்பட்டது. அதன் படி, கடந்த 13.03.2026 ஆம் தேதி மனுதாரர் ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்தார்.

**2) மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை விபரம்:-**

மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது 16 நபர்கள் அவர்களை தாக்கியதாக கூறியதாகவும், மனுதாரர் அவரை தாக்கிய நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் 11 நபர்களும் அவர்களுடன் வந்த 5 நபர்களும் எதிரிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் குற்றவாளிகளை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 9 முதல் 11 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் தான் எதிரிகள் சட்டத்திற்கு புறம்பாக ஒன்று சேர்ந்து புகார்தாரரை தாக்கியுள்ளனர். எனவே மேற்படி நபர்களை வழக்கில் இருந்து நீக்குவது ஏற்புடையதல்ல. எனவே, வழக்கை மீண்டும் சட்டப்படியாக புலன்விசாரணை செய்து சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4. இம்மனுவை அனுமதிக்க போதிய காரணம் உண்டா என்பதே தீர்வுக்குரிய



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.27 17:54:29 +0530

பிரச்சனையாகும்.

**5. தீர்வு**

மனுதாரர் தாக்கல் செய்த புகார்மனுவினை பரிசீலனை செய்யும்போது, வழக்கு சம்பவ தினத்தன்று வழக்கில் இருந்து நீக்கப்பட்ட ஜெனிபர், ஆனஸ்ட், நல்லரசி மற்றும் அடையாளம் தெரியாத 5 நபர்கள் சாட்சிகளை தாக்கியதாக புகார்மனுவில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். குற்ற இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்த எதிரி நீக்கல் அறிக்கையினை பரிசீலனை செய்யும்போது, ஜெனிபர், ஆனஸ்ட், நல்லரசி மற்றும் அடையாளம் தெரியாத 5 நபர்கள் ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக விசாரணையில் தெரியவில்லை என்றும், புகார்தாரர் அவர்களையும் வழக்கில் சேர்த்தால் வழக்கிற்கு வலு சேர்க்க முடியும் என்ற தவறான எண்ணத்தில் அவர்களையும் வழக்கில் சேர்த்து புகார் கொடுத்துள்ளது தெரிய வருகிறது என்று சொல்லி மேற்படி நபர்களை வழக்கில் இருந்து நீக்கி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது புலப்படுகிறது. மனுதாரர் தான் தாக்கல் செய்த புகார்மனுவில் தெளிவாக மேற்படி எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என குறிப்பிட்ட பிறகும் புலன்விசாரணை அதிகாரி மேற்படி நபர்கள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதனால் புலன்விசாரணை அதிகாரி ஒருதலைபட்சமாக செயல்பட்டு குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளாரோ என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

ஆகையால், இவ்வழக்கின் சாராம்சத்தை பரிசீலனை செய்ததில், இம்மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரங்கள் இருப்பதாக கருதி, மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் பால் சிறந்தது என்று நீதிமன்றம் முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

சாத்தான்குளம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கூடுதல் புலன்விசாரணை மேற்கொண்டு 27.05.2026 ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.27 17:54:37 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

**நகல்:-**காவல் ஆய்வாளர், சாத்தான்குளம் காவல் நிலையம்.